kanton glarus

**Opferberatungsstelle des Kantons Glarus**
Bahnhofstrasse 13
8762 Schwanden

Telefon: 055 646 67 36
E-Mail: opferberatung@gl.ch
www.gl.ch

opferhilfe-schweiz.ch
aiuto-alle-vittime.ch
aide-aux-victimes.ch

# பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிச் சட்டத்தின்படி இழப்பீடும் உளரீதியான வலிகளுக்கு நட்டஈடும் பற்றிய தகவல்கள்

## பொதுவான தேவைகள்

குறிப்பிட்ட சில நிபந்தனைகளின் கீழ், பாதிக்கப்பட்டவர் மற்றும் அவரது உறவினர்கள் உடல்ரீதியான, உளரீதியான பாதிப்புகள், பாலியல் குற்றங்க-ளினால் பாதிப்பு அல்லது இறப்பு இவற்றால் ஏற்பட்ட சேதங்களுக்கு இழப்பீடு பெற உரிமை உண்டு. பாதிப்பின் தீவிரம் இதனை உறுதிப்படுத்தினால் சில நிபந்தனைகளின் கீழ் உளரீதியான பாதிப்பிற்கு நட்டஈடு பெறுவதற்கான உரிமையும் உள்ளது. ஒவ்வொரு கன்ரோனிலும் இதற்குப் பொறுப்பான அலுவலகம் உண்டு. இழப்பீடு அல்லது உளரீதியான பாதிப்பிற்கு நட்டஈட்டிற்கான அல்லது இரண்டிற்குமான விண்ணப்பம் ஒரு குற்றவியல் புகாரைப் பொறுத்தது அல்ல. பொறுப்பான அலுவலகத்தால் வழங்கப்படும் சேவைகளுக்கு மூன்றாம் தரப்பினரால் வழங்கப்படும் எந்தவொரு சேவைகளும் துணையாகும். இதன் பொருள் குற்றத்திற்கு பொறுப்பான நபர் அல்லது அவர்களின் காப்பீடு உங்களுக்கு நிகழ்ந்த சேதத்திற்கு பொறுப்பேற்க வேண்டும்.

பாதிக்கப்பட்டவருக்கான ஆலோசனை நிலையம் விடயங்களை தெளிவு படுத்துவதற்கும், தேவைப்பட்டால், உங்களின் உரிமை கோரல்களை உறுதிப்படுத்துவதற்கும் உங்களுக்கு ஆதரவு தரும். உங்களுக்கு தனிப்பட்ட முறையில் ஆலோசனை வழங்குவதில் நாம் மகிழ்ச்சியடைவோம்.

கீழே மிக முக்கியமான தகவல்கள் உள்ளன:

## இழப்பீடு

பாதிக்கப்பட்டவருக்கான ஆதரவு சட்டத்தின் கீழ் இழப்பீடு ஒரு வன்முறைக் குற்றத்தால் ஏற்படும் பொருட் சேதத்தை உள்ளடக்கியது. இவற்றுள் பின்வருவன உள்ளடங்குகின்றன: வருவாய் இழப்பு, பராமரிப்புப் பாதிப்புச் சேதம், இறுதிச்சடங்குச் செலவுகள், வீட்டுப்பணிகளுக்கான சேதம் ஆகியன. இதில் சொத்து மற்றும் பொருட்களின் சேதங்கள் விலக்கப்பட்டுள்ளன.

சில நிபந்தனைகளின் கீழ், முன்கூட்டியே இழப்பீட்டுக்கான விண்ணப்பத்தை சமர்ப்பிக்கலாம். பாதிக்கப்பட்டவருக்கான சட்டத்தின் கீழ் இழப்பீடு கோருவது பாதிக்கப்பட்டவரின் நிதி நிலைமையைப் பொறுத்தது.

## உளரீதியான வேதனைகளுக்கு இழப்பீடு

18. Mai 2020

இது ஒரு வன்முறைக் குற்றத்தால் ("வலி மற்றும் துன்பங்களுக்கு இழப்பீடு") ஏற்படும் பொருள் அல்லாத சேதத்தை ஈடுசெய்யும் நோக்கம் கொண்டது. பாதிக்கப்பட்டவரின் நிதி நிலைமையைப் பொருட்படுத்தாமல் நட்டஈடு செலுத்தப்படுகிறது. குற்றம் இழைக்கப்பட்டவர் தீவிரமாக பாதிக்கப்பட்டிருந்தால் விண்ணப்பம் செய்யலாம். உதாரணமாக பின்வருவன:

- உளவியல் குறைபாட்டை ஏற்படுத்தும் பாலியல் குற்றங்கள்;
- கடுமையான உடல் காயங்களால் கடுமையான விளைவுகள் ஏற்படுதல் அல்லது நீண்டகால குணப்படுத்தும் செயல்முறை;
- ஒரு கொலைமுயற்சிக்குப் பிறகு தப்பிப்பிழைத்தவர்கள்;
- பாரிய, தொடர்ச்சியான வன்முறையால், கடுமையான உளவியல் குறைபாடுகள் அவை பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கைமுறையில் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தும்போது.

**கால வரம்புகள்**

குற்றம் நடந்த திகதியிலிருந்து **5 ஆண்டுகளுக்குள்** நட்டஈடு மற்றும் உளரீதியிலான இழப்பீட்டிற்கான விண்ணப்பங்கள் செய்யப்பட வேண்டும். 1.ஜனவரி 2007 முதல் செய்யப்பட்ட குற்றங்களுக்கு 5 ஆண்டு காலம் பொருந்தும். முந்தைய குற்றங்கள் தொடர்பாக உரிமைகோரல் சட்டப்படி ஏற்கனவே தடைசெய்யப்பட்டுள்ளது. இதற்குப் பொறுப்பான அலுவலகம் சிறப்பு, அத்துடன் விதிவிலக்கு விதிமுறைகளை தீர்மானிக்கிறது. நடைமுறைகள் பற்றி உங்களுக்கு ஆலோசனை வழங்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம்.

விண்ணப்பங்கள் சட்டப்படி பின்வரும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்:

Departement Volkswirtschaft und Inneres
Opferhilfe
Zwinglistrasse 6
8750 Glarus

**உறுதிப்படுத்தல்**

பாதிக்கப்பட்டவருக்கான ஆலோசனை நிலையம் கன்ரோன் கிளாறூஸ், பாதிக்கப்பட்டவருக்கான ஆதரவுச் சட்டம், இழப்பீடு மற்றும் உளரீதியிலான நட்டஈடு ஆகியவற்றில் உள்ள எனது உரிமைகள் குறித்து எனக்கு அறிவித்துள்ளது என்பதை இதன் மூலம் உறுதிப்படுத்துகிறேன்.

திகதி: கையொப்பம்:

____________________________ ____________________________